உ. வித்வான். T.A. வெங்கடராம ஐயர். A (1)

## ஸமுச்சய வாதம்.

2/3 வேதாந்த உண்மைகளை விளக்கி உபதேசம் செய்யும் சான்றோர்கள், பலவகை வாதமுறைகளைக் கூறி, தாம் செய்ய எண்ணியதை நிறைவேற்றுவார்கள். மாணவர்களின் மனத்தில் நுட்பமான பொருள்களைப் பதிய வைக்கவே இந்த வாத முறைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இவற்றுள் சில வாதங்கள் மறுக்கப்பட வேண்டிய நிலையில் இருக்கும். இவற்றிற்குப் பூர்வபக்ஷ வாதங்கள் என்றுபெயர். சிலவாதங்கள் உண்மையை விளக்குவதற்குச் சாதனங்களாக அமையும். அவற்றை அநுகூலவாதங்கள் எனலாம்.

அத்யாரோப அபவாத வாதம், ஆபாஸ வாதம், அவச்சேதவாதம், பிம்ப ப்ரதிபிம்ப வாதம், த்ருஷ்டி ஸ்ருஷ்டி வாதம், ஸ்ருஷ்டி த்ருஷ்டிவாதம், அஜாதவாதம், ஏகபவிகவாதம், ஸமுச்சயவாதம், முதலிய பல வேறு வாதமுறைகள் உள்ளன.

இங்குக் கூறியவற்றுள், ஏகபவிகவாதம், ஸமுச்சய வாதம் ஆகிய இரண்டைத்தவிர எஞ்சிய வாதமுறைகள் யாவும், அத்வைத குருமார்களால், வேதாந்த உண்மைகளை விளக்கமாக வெளியிட, அநுகூலவாதங்களாகவே ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. ஏகபவிக வாதமும், ஸமுச்சயவாதமும் அத்வைத அறிஞர்களால் மறுத்துக் கூறப்படும் வாதங்களாகும். இவற்றைத் தமக்கு ஆதாரவாக ஏற்றுக்கொள்பவர்கள், தர்மமீமாம்ஸையையே முடிந்த கருத்தாகக் கொண்டுள்ள பெரியோர்களாவர். தர்ம மீமாம்ஸை என்பது பூர்வ மீமாம்ஸையாகும். இந்த சாஸ்த்ரத்தை இயற்றியவர் ஜைமினி முனிவராவர். "இந்த சாஸ்த்ரத்தில் கூறப்பட்ட கருத்துக்களே முடிவான கருத்துக்கள்" என்பதை அத்வைத குருமார்கள் ஏற்றுக் கொள்வதில்லை அதற்கு அவர்கள் கூறும் காரணங்கள் பலப்பல.

இப்போது ஸமுச்சயவாதம் என்பதைமட்டும் எடுத்துக் கொண்டு, சிலவற்றைக் கூறுவோம்.

வாதம் என்ற சொல்லுக்கு "விளக்கமுறைக் கூறுதல்" என்று இங்கே பொருள் கூறுவது, பொருத்தமானது. ஸமுச்சயம் என்ற சொல், "இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட எண்ணிக்கையுள்ள பொருள்களின் கூட்டு" என்ற பொருளைத் தரும்.

இங்கு ஸமுச்சயவாதம் என்பதன் முழுப்பொருள்

"வேதம் கூறுகின்ற நல்லசெயல்களும், உபாஸனைகளும்,
3/3 மெய்யறிவும், ஆகிய இம்மூன்றும் சேர்ந்தே மக்களுக்கு மோக்ஷத்தைத் தரும்; தனித்த மெய்யறிவு அதாவது ஆத்ம ஜ்ஞானம் மட்டும் மோக்ஷத்தைத்தராது" என்பதாகும். இவ்வாறு கூறுபவர்கள் தர்ம மீமாம்ஸையில் மட்டுமே ஈடுபாடுகொண்டவர்களாவர். "உபாஸனையும் மனத்தின் ஒருவகையான செயலே" ஆதலால் அதையும் நல்லசெயல்களாகிய கர்மாவில் அடக்கிவிடலாம். எனவே கர்மாவுடன் கூடிய ஜ்ஞானமே ஸம்ஸாரதுன்பங்களை நீக்க வல்லது; தனித்த மெய்யறிவால் யாதும் பயனில்லை" என்று, இவ்வாறு "ஸமுச்சயவாதம்" என்றதொடர்ந்த கருத்தை விரிவாக அறியலாம் ~~தெரிந்து கொள்ளலாம்~~.

"ஆத்மாவைப்பற்றிய மெய்யறிவு ஒன்றுதான் கைவல்யமாகிய மோக்ஷத்தை அளிக்கும். அந்த மெய்யறிவுக்கு, மோக்ஷம் தரும் தகுதியை உண்டாக்க வேறு எதன் துணையும் வேண்டா" என்பது அத்வைத உண்மையாளரின் முடிவான கருத்து.

இனி ஸமுச்சயவாதிகளின் கருத்துக்களை விளக்கி, அவை எவ்வாறு பொருத்தமற்றவை என்பதையும் விளக்குவோம்.

ஸமுச்சய வாதிகள் கூறுவன;

1. "ஜ்ஞானம் மட்டும் மோக்ஷத்தை அளிப்பதில்லை; கர்மாவுடன் சேர்ந்த ஜ்ஞானமே மோக்ஷத்திற்கு ஸாதனமாகும். ஒருபறவை தன் இரண்டு சிறகுகளின் உதவியாலேயே பறக்கிறது; தான் விரும்பிய இடத்தை அடைகிறது; அது ஒருசிறகை மட்டும் வைத்துக்கொண்டு பறப்பதில்லை. அவ்வாறு பறத்தல் இயலாதசெயலாகும், அதுபோல ஜ்ஞான வழியான ஒர் இறகைவைத்துக்கொண்டு, ஜீவன் மோக்ஷ உலகை அடைதல் இயலாது; கர்மாவாகிய மற்றொருசிறகும் வேண்டும். ஜ்ஞானம் ஒருசிறகு; உபாஸனையுடன் கூடிய கர்மா ஒருசிறகு; உபாஸனை என்பது மனத்தின் செயலே; ஆகையால் அதுவும் கர்மாவில் அடங்கும்.

2. "கர்மாவும் உபாஸனையும் மனத்தூய்மையை உண்டாக்கும்; அந்த வழி மூலம் மோக்ஷத்திற்கும் துணையாகும்" என்று கூறுவதும் தவறு" அவை இரண்டும் பாரம்பரையாக அல்லாமல் நேராகவே மோக்ஷத்தை அளிக்கவல்லவை. எங்ஙனமெனில்,

புண்ணிய நதியாகிய கங்கையை காண்பதும், அதில் நீராடுவதும் பாவங்களைப் போக்கும். காண்பதும் நீராடுவதும் கண்கூடான 4/3 அறிவாகும். அந்த அறிவும் அதனால் ஏற்படும் விளைவும், பக்தியோடும் நம்பிக்கையோடும் கூடியிருந்து அங்குச் செல்பவனுக்கே, பயன் தரும்; பக்தியும் நம்பிக்கையும் இல்லாதவனுக்கு, கங்கைக் காட்சியும் நீராடலறிவும் பயனாகிய புண்ணியத்தைத் தரமாட்டா; பாவங்களைப் போக்கமாட்டா. கங்கையைக் காணல் என்ற ப்ரத்யக்ஷ அறிவு, தன் பயனை அளிக்க, பக்தியையும், நம்பிக்கையையும் எவ்வாறு துணையாகக் கொள்கிறதோ, அதுபோல மெய்யறிவும் மோக்ஷமாகிய பயனை அளிக்க கர்மாவையும் உபாஸனையையும் துணையாக வேண்டுகிறது. அத்தகைய துணை இல்லையானால் மெய்யறிவு பயனற்றது. எனவே துணைபுரியும் கர்மாவும் உபாஸனையுமே நேரான முக்கியத் தன்மையை அடைந்து மோக்ஷத்தை அளிக்கின்றன என்று கூறுவது பொருத்தமானதேயாகும். ~~மேலும்,~~

மேலும்,

கர்மாவும் உபாஸனையும் ஆத்ம ஞானத்திற்கு ஸாதனம் என்பது அத்வைதிகள் ஏற்றுக்கொண்ட உண்மை; ஆனால் அவை மோக்ஷத்திற்கும் ஸாதனமே என்றுகூறுவது தவறாகாது; எங்ஙனமெனில்,

மரம் வளர்வதற்குத் தண்ணீர் வேண்டும்; அந்தமரம் பழுத்துப் பயனையளிக்கவும் தண்ணீர் வேண்டும்; தண்ணீர் இல்லையானால் மரம் வாடிவிடும்; பழம் தோன்றாது. மரம்வளர்வதற்கும் பழம் தருவதற்கும் எவ்வாறு தண்ணீர் காரணமோ, அதுபோல கர்மாவும் உபாஸனையும் மெய்யறிவு உண்டாவதற்கும் அதன் பயனாகிய மோக்ஷம் உண்டாவதற்கும் காரணமாகும்.

மேலும்,

கர்மாவும் உபாஸனையும் மெய்யறிவுபெற்ற அறிஞரின் அறிவைப் பாதுகாப்பதற்கும் துணைபுரியும். ஆகையால் மெய்யறிவு பெற்றவரும் தம் அறிவைப் பாதுகாத்துக்கொள்ள அவற்றை மேற்கொள்ளல் வேண்டும். இல்லையானால் பெற்ற மெய்யறிவும் அழியத்தொடங்கும். நன்கு வளர்ந்தமரமும் நீரில்லையானால் வாடிவிடும்; அதுபோல மெய்யறிவும், கர்மாவும் உபாஸனையும் இல்லையானால், மனத்தில் மாசுகள் வந்தடைய, அதனால் அழியும்.

மாசுகளற்ற தூய மனத்திலேயே ஞானம் உண்டாகும். நல்ல வினைகளைச் செய்யாமல் இருந்தால் பாவம் ஏற்படும்; உபாஸனைகள் இல்லையானால் மனம் நேர்படும் நிலைபெறாமல்
5/3 அலையும்; பாபமும் அலைச்சலும் உள்ள மனத்தில் மெய்யறிவு நிலையாக இராது. தண்ணீரில்லாத பூமியில் மரம் நிலைபெற்று வளராதல்லவா?

ஆகையால் தனித்த மெய்யறிவு மோக்ஷம் தராது; கர்மாவும், உபாஸனையும் ஞானமும் சேர்ந்தே மோக்ஷம் தரும்; மெய்யறிவை அழியாமல் பாதுகாக்க, கர்மாவும் உபாஸனையும் இன்றியமையாதது வேண்டும்; எனவே மெய்யறிவு பெற்ற துறவிகளும் நற்செயல்களைப்புரிய வேண்டும்; உபாஸனைகளையும் செய்தல் வேண்டும்."

இவ்வாறு ஸமுச்சயவாதிகள் கூறுகின்றனர்; "இக்கருத்துக்கள் யாவும் பொருத்தமற்றவை" என்பது அத்வைத அறிஞர்களின் முடிவான கொள்கையாகும். அவர்கள் இக்கருத்துக்களை, "எக்காரணங்களால் ஏற்றுக் கொள்வதில்லை" என்பதை விளக்குவோம்.

அத்வைத உண்மையாளர் கூறுவன:

தனித்த மெய்யறிவாலேயே மோக்ஷம் ஏற்படும்; அந்த மெய்யறிவுக்கு எதன் துணையும் வேண்டா; இதற்குச் சான்றாக உள்ள சில வேதவாக்யங்கள் பின்வருவன:

1. तरति शोकं आत्मवित् ॥
2. तमेवं विद्वान् अमृत इह भवति
3. ज्ञात्वा देवं मुच्यते सर्व पाशैः
4. भिद्यते हृदय ग्रन्थिः छिद्यन्ते सर्व संशयाः ।
   क्षीयन्ते चास्य कर्माणि तस्मिन् दृष्टे परावरे ॥

~~இந்த~~ இவை போன்ற பலவாக்யங்கள் உண்டு; இவற்றால் தனித்த மெய்யறிவே மோக்ஷத்திற்குத் துணையாகும் என அறியலாம்.

ஆத்மாவிடம் தோன்றும் ஸம்ஸாரபந்தம் உண்மையானதன்று; அது பொய்யானது; ஆகையால் அதைப் போக்க கர்மாவும் உபாஸனையும் பயன்படா; மெய்யறிவே அறியாமையால் விளைந்த அதைப் போக்கும்.

கயிற்றில் தோன்றும் பாம்பு, "இதுகயிறு" என்ற அறிவாலேயே போகும்; வேறுவகையான கர்மாவினாலும் உபாஸனைகளாலும் போகாது. பாம்பின் அறிவை, கயிறு என்ற அறிவு அழிக்கும் போது, அதற்குத் துணையாக எதுவும் இருப்பதில்லை. அதுபோல ஆத்மாவினிடம் ஸம்ஸார நிலை பொய்யாகத் தோன்றுகிறது; அதை அழிக்க ஆத்மஞானம் ஒன்றே போதும்; அதற்கு எதுவும் துணையாக இருத்தல் வேண்டா.

6/3 மேலும்,

கர்மாவின் துணையாலும் உபாஸனையின் துணையாலும், மோக்ஷம் ஏற்படுமானால் அது அழியும் இயல்பினதாகவே இருக்கும்; ஏனெனில் கர்மாவினால் உண்டாகும் பொருள் யாவும் அழியும்; "மோக்ஷம் அழிவற்றது" என்று யாவரும் ஒப்புகின்றனர்; இதில் வேறுபட்ட எண்ணமே இல்லை. எனவே மோக்ஷம் ஏற்பட கர்மங்களின் துணை வேண்டா.

மேலும்,

மெய்யறிவு பெற்றவனிடம் கர்மங்கள் நிகழமாட்டா. மெய்யறிவுக்கும் கர்மங்களுக்கும் பகைமையே உண்டு; ஒற்றுமை இல்லை; "நான் செய்பவன், நான் நுகர்பவன்" என்ற எண்ணத்தை அடிப்படையாகக் கொண்டு கர்மங்கள் நிகழும்; "நான் செய்பவனில்லை நான் நுகர்பவனும் இல்லை என்ற எண்ணத்தை அடிப்படையாகக் கொண்டு மெய்யறிவு நிகழும். கர்மங்களின் பயன் இன்பதுன்பங்கள் நிறைந்த ஸம்ஸாரவாழ்க்கை; மெய்யறிவின் பயன், ஸம்ஸார வாழ்வின் அழிவு வடிவான மோக்ஷமாகும். கர்மங்களுக்கு மறுபிறப்பைத் தரும் தகுதி உண்டு; மெய்யறிவுக்கு மறுபிறப்பை அழிக்கும் தகுதி உண்டு. பெரியோர்கள், உலகவாழ்வை "அப்யுதயபலம்" என்று கூறுவர்; மறுபிறப்பற்ற மோக்ஷத்தை "நிச்ரேயஸபலம்" என்று கூறுவர். இவை ஒன்றோடொன்று மாறுபட்டவை. இவற்றை முறையே தரும் கர்மங்களும் மெய்யறிவும் தம்முள் மாறுபட்டவையே; எனவே "இவற்றின் கூட்டு" என்பது ஏற்படுவது, பொருத்தமற்றது.

மேலும்,

"ஒரு பறவைக்கு இரு சிறகுகள், போல மெய்யறிவு பெற்றவனுக்கு கர்மாவும், உபாஸனையும் இன்றியமையாதவை" என்று ஸமுச்சயவாதிகள் காட்டிய உதாரணமும் பொருத்தமற்றது; எவ்வாறெனில்,

பறவை பறந்து செல்லவேண்டும்; பறந்து சென்றே விரும்பிய இடத்தை அடைதல் வேண்டும். அதுபோல ஆத்மஜ்ஞானி முடிவில் அடையத்தகுந்த இடமே இல்லை; அவன் இங்கேயே விடுதலையடைந்துவிடுகிறான். அவன் உடலைவிட்டபின் அவனுடைய ப்ராணன் முதலியவை வெளியே செல்வதில்லை. மற்றொரு இடத்தை அடைவதில்லை; அவை தம்முடைய காரணப்பொருளில் அழிந்துவிடுகின்றன; அத்வைதத்தில் மோக்ஷமென்பது இங்கேயே அடையப்படுவதாகும்; அது, தான் தானாகவே இருக்கும் "ஸ்வரூப அவஸ்திதிநிலை" ஆகும்
7/3 அது ஏற்கனவே அடையப்பட்டுள்ளது; அடையப்படாதது போல அறியாமையால் தோன்றுவது; வேதமொழிகளாலும், குருவின் உபதேசத்தாலும் அந்த அறியாமையாகிய அவித்யை அழிகிறது; அவ்வளவே ஸாதனங்கள் செய்யும் உதவி; அவித்யை அழிந்தபின் அந்த மெய்ப்பொருள் தானாகவே விளங்குகிறது; அதனை "ப்ராப்த ப்ராப்யம்" அடையப்பட்டதை அடைதல் என்பர்; அது முன்பும் இருந்தது; இப்போதும் உள்ளது; வருங்காலத்திலும் உள்ளது அது அடையப்படாமலிருந்து பிறகு அடையப்பட்டதன்று; அதாவது அப்ராப்தப்ராப்யமன்று; எனவே எங்கும் செல்லவேண்டாம்; செல்வதற்குத் துணைக்கருவியும் வேண்டாம்.

மேலும் பறவைக்குள்ள இருசிறகுகளும் ஏககாலத்தில் தோன்றுகின்றன; ஒன்றாக உதவுகின்றன; அதுபோல ஜ்ஞானமும் கர்மமும் ஏககாலத்தில் தோன்றிச்சேர்ந்திருப்பனவல்ல. அவை தம்முள் பகைமைகொண்டவை; ஆதலால் அவை கூடியிரா.

இங்கே கர்மா முன்பும் ஜ்ஞானம் பின்பும் உண்டாகி இருப்பதை மறுக்கவில்லை; இதற்குக் க்ரமஸமுச்சயம் என்று பெயர். இரண்டும் ஒரே காலத்தில் உண்டாகிச்சேர்ந்து இருப்பது தான் மறுக்கப்படுகிறது. இதற்கு ஸமஸமுச்சயம் என்றுபெயர்

ஸமுச்சயவாதிகள் கூறும் கங்கைக்காட்சியாகிய உதாஹரணமும் பொருத்தமாகாது; எவ்வாறெனில்

கங்கையைக் காண்பதாலும், அதில் நீராடுவதாலும் புண்ணியம் ஏற்படுகிறது; பாபம் அழிகிறது; இதை நல்ல சாஸ்த்ரங்கள் விளக்குகின்றன;

புண்யம் தோன்றுவதையும் பாபம் விலகுவதையும் நாம் கண்களால் பார்ப்பதில்லை; சாஸ்த்ரங்களின் மூலமாகவே அறிகிறோம். இதற்கு அத்ருஷ்டபலம் என்று பெயர். அத்ருஷ்டபலத்தைத் தரும் செயல்களுக்கு சாஸ்த்ரங்களில் கூறிய துணை வேண்டும். யாகங்கள் கண்ணுக்கு கெட்டாத ஸ்வர்க்கமாகிய பயனைத்தருகின்றன. இந்தப்பயன் அத்ருஷ்ட பலம்; இதைநாம் அடையவிரும்பினால் யாகம்செய்ய வேண்டிய பல முறைகளிலிருந்து தவறாமல் யாகத்தைப்புரிய வேண்டும். தவறினால் பயன் ஏற்படாது; இதைப்போன்றதே கங்கைக்காட்சியும், நீராடலும் ஆகும். செய்ய வேண்டிய முறைகளில் தவறாமல் அவற்றைச்செய்தாலே யே, அவற்றால் பயனேற்படும். செய்ய வேண்டியமுறை, பக்தியோடும், நம்பிக்கையோடும் செய்யும் முறையாகும். எனவே கண்ணுக்கெட்டாத

8/3 அபூர்வமான பயனை அளிக்கும் காரியங்களுக்குத் துணைநியமம் வேண்டும். கண்கூடாக இருக்கும் த்ருஷ்டபயனைத்தரும் செயல்களுக்குத் துணைநியமங்கள் வேண்டா.

நெருப்படக்காட்சியைப்பார்க்கிறோம்; அதனால் த்ருப்தி ஏற்படுகிறது; இது த்ருஷ்டபலம். படக்காட்சி, த்ருஷ்டபலனை-அதாவது ப்ரத்யக்ஷமாக உடனே உண்டாகும் பலனை அளிப்பதால் அதைப்பார்ப்பதில் நியமமுறை இல்லை. படுத்துக்கொண்டும் பார்க்கலாம். உட்கார்ந்தும் பார்க்கலாம், பிறமுறைகளாலும் காணலாம். த்ருப்தி ஏற்பட்டுவிடும். உணவால் பசி நீங்குவதும் அப்படியே. எப்படி இருந்து உண்டாலும் பசி நீங்கும். உண்ணும் போது வைத்துக்கொள்ளப்படும் நியம முறைகள் அபூர்வப்பயனையேதரும். அவைகள் பசிநீக்கத்திற்குப்பயன்படா. எனவே த்ருஷ்ட ~~ப்~~ பலனைத்தரும் செயல்களுக்கு துணைநியமங்கள் வேண்டா.

மெய்யறிவால் ஏற்படுவது த்ருஷ்டபலம். அது இங்கேயே ப்ரத்யக்ஷமாக ஏற்படுகிறது; உடனேயே ஏற்படுகிறது; அது எங்கோ சென்று அடையப்படுவதில்லை. மோக்ஷமென்பது "ஸ்வரூபாவஸ்திதியே" அதாவது "தான் தானாக இருத்தலே" ஆகும். அந்த ஸ்வரூப அறிவு எப்போதுமே அறியாததாக தன்னுள்ளேயோடு இங்கும், அங்கும், எங்கும், விளங்குவது; எனவே அதை "நித்யாபரோக்ஷம்" என்று சான்றோர் கூறுவர். மெய்யறிவால் அறியாமை அழிந்தவுடன், அந்தவடிவம், தானே,-உடனே விளங்கும். ~~[illegible]~~

அதுவே மோக்ஷம்; அது த்ருஷ்டபலம். மெய்யறிவு பெற்றவர் இதை அடைவர்; ஆகையால் இதை அளிப்பதில் மெய்யறிவுக்கு யாதொரு துணையும் தேவையில்லை.

ஸமுச்சயவாதிகள் மரத்தை உதாஹரணமாகக்காட்டினர். தண்ணீரே மரம்வளர்வதற்கும் காரணம்; பழம் தோன்றுவதற்கும் காரணம் என்று கூறினர், அதுவும் பொருந்தாததேயாகும்;

மூப்படைந்த மரம் பழுப்பதில்லை; அது வாடாமல் இருக்க தண்ணீர் பயன்படும். அங்கே தண்ணீரால் பழத்தைத் தோற்றுவித்தல் இயலாது; தண்ணீரால் வளர்ந்த மரமே பழத்திற்குக்காரணம்; தண்ணீர் பழத்திற்கு நேரான காரணமன்று; நேரான காரணம்
9/3 மரமேயாகும். தண்ணீரால் செழிப்பு மரத்திற்கு உண்டாகும். அவ்வாறே பழம் தோன்றுவது மரத்தைப் பொறுத்ததேயாகும். அதுபோல கர்மங்களும் உபாஸனைகளும் மெய்யறிவுக்கு ஒருவகையில் காரணமாகுமே அன்றி மோக்ஷத்திற்கு நேரான காரணமாகா.

"மரம் வாடாமல் இருக்க, தண்ணீர் வேண்டும்; அதுபோல், உண்டான மெய்யறிவைப் பாதுகாக்க கர்மங்கள் வேண்டும்; இல்லையானால் மாசுகள் நிறைந்த மனத்தில் உண்டான மெய்யறிவு அழியும்" என்று பிறர் கூறுவதும் பொருந்தாததேயாகும்.

மரத்திற்கும் தண்ணீருக்கும் அழியாத நட்பு உண்டு. அதனால் தண்ணீர் மரத்தைப்பாதுகாக்கும். மெய்யறிவுக்கும் கர்மங்களுக்கும் நீங்காப் பகைமையே உண்டு. மெய்யறிவு கர்மங்களை அழித்துவிடும். ஒன்று இருக்கும் இடத்தில் மற்றொன்று இராது. மேலும் மெய்யறிவு பெற்றவனின் மனத்தில் மாசுகளும் இரா. அந்த மனத்தில் அலைச்சலும் இராது. எனவே அதில் தோன்றிய உண்மை அறிவு அழிய, வாய்ப்பே இல்லை. வேதம் கூறிய நல்லசெயல்களை ஞானி செய்யமாட்டான். அதனால் அவனுக்குப்பாபம் நேராது. ஊழ்வினையின் வினைவால் அவன் வேதம் விலக்கிய செயல்களைப் புரிந்தாலும் அவனுக்குப் பாபம் இல்லை.

"निस्त्रैगुण्ये पथि विचरतां को विधि: को निषेध:"

என்பது உண்மையுணர்ந்தோரின் அருள்மொழியாகும்.

ஆயினும் மெய்யுணர்வு பெற்ற சில ஜீவன் முக்தர்களிடம் செயல் புரியும் தன்மை காணப்படும். இந்தச்செயல்கள் உண்மையான கர்மங்களல்ல; இவைகள் போலியான கர்மங்கள். இவை அவர்களுக்கு ஸம்ஸாரபந்தத்தைத் தரமாட்டா. இவை முளைவிடாத வறுத்த விதை போன்
10/3 றவை; இவை பிறரை நல்வழிப்படுத்தவும், அற்பமான போகங்களை ஞானிகளிடம் உண்டாக்கவும் தகுதி கொண்டவையே அன்றி, அறியாதவர்களின் செயல்கள் போல் மறுபிறவியைத் தரமாட்டா.

இங்கே கீழ்வரும் பகவத்கீதையின் மொழிகள் நினைவுறத் தக்கவையாகும்.

त्यक्त्वा कर्मफलासङ्गं नित्य तृप्तो निराश्रयः।
कर्मणि अभि प्रवृत्तोऽपि नैव किंचित् करोति सः॥
निराशीः यतचित्तात्मा त्यक्त सर्व परिग्रहः।
शारीरं केवलं कर्म कुर्वन् न आप्नोति किल्बिषं॥